இன்றைய செய்தி நாளைய வரலாறு
முரசொலி
நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி
ஞாயிற்றுக்கிழமை 06-10-2024

# பொய்யிலே பிறந்த ஆளுநர்

வாயைத் திறந்தாலே பொய்யும், அவதூறும் பேசுவது என்று சபதம் எடுத்து வந்தவராக இருக்கிறார் ஆளுநர் ஆர்.என்.ரவி. இவரெல்லாம் ஐ.பி.எஸ். ஆக இருந்த காலத்தில் என்னவெல்லாம் செய்திருப்பாரோ என்ற அதிர்ச்சியே வருகிறது.

அக்டோபர் 2 ஆம் தேதி திடீரென இவருக்கு காந்தி பக்தி வந்துவிட்டது. அவரைப் பற்றிப் பேசி இருக்கிறார். இவர்தான் மதச்சார்பின்மை என்பதை ஐரோப்பியச் சரக்கு என்று சில நாட்களுக்கு முன் சொன்னவர். மதச்சார்பின்மை - மத நல்லிணக்கம் ஆகியவற்றை அதிகமாகப் பேசியவர் காந்தி. அதற்காகத்தான் அவர் தனது உயிரையே கொடுத்தார். அத்தகைய காந்தியை மதவாத ரவி கொண்டாடுவது, இந்த நூற்றாண்டில் காந்தியாருக்குச் செய்யப்பட்ட அவமரியாதை என்றுதான் சொல்ல வேண்டும்.

**அண்ணல் காந்தியடிகள் விழாவில் உரையாற்றிய ஆளுநர் ரவி, தலித்துகளுக்கு எதிரான குற்றங்கள் கடந்த மூன்று ஆண்டுகளில் அதிகரித்துள்ளது என்ற வன்மமான - பொய்யான - அவதூறான - உள்நோக்கம் கொண்ட - இழிவான ஒரு குற்றச்சாட்டை வைத்துள்ளார். இதற்கு என்ன ஆதாரம்? அவரது தவறான மனச்சாட்சிதான் ஆதாரமாக இருக்க முடியும்.**

சமூகநீதி பேசுகிறோமாம். ஆனால் தலித்துகள் மீதான வன்கொடுமை நடக்கிறதாம். சொல்கிறார் ஆளுநர். அதற்கான ஆதாரம் என்ன? நாற்பது விழுக்காடு அதிகமாகி விட்டதாம். யார் சொன்னது? நாற்பது என்று அவரது நாக்குதான் சொல்லி இருக்கிறது. ஒரு பொறுப்பான பதவியில் இருக்கக் கூடிய ஒருவர், இப்படிதான் ஒரு மாநிலம் பற்றி தினந்தோறும் அவதூறு பேசுவாரா? அப்படி அவதூறு பேசுவதற்காகத் தான் தமிழ்நாடு அரசாங்கத்திடம் இருந்து மாதம்தோறும் சம்பளம் வாங்குகிறாரா? இவ்வளவு ரோசக் காரராக இருந்தால் எதற்காக தமிழ்நாடு கவர்னர் என்று போட்டுக் கொள்ள வேண்டும்? போக வேண்டியதுதானே?

**திராவிடம், ஆரியம், சனாதனம் என்று புரியாமல் ஏதோ பேசித் தொலைக்கிறார் என்றால் அவரது அரசியல் போதாமையை விட்டுத் தொலைக்கலாம். ஆனால் அரசைக் குறை சொல்வது அரசியல் வன்மம் அல்லவா? கமலாலயமாக கிண்டி மாளிகையை ஆக்கத் துடிக்கிறாரா? அல்லது அண்ணாமலை வரும் வரை அவர் வேலையைப் பார்க்க நினைக்கிறாரா? அல்லது அண்ணாமலைக்கு பதிலாக பா.ஜ.க. தலைவராக நினைக்கிறாரா?**

புனைவுகளை பேச்சுகளாக எழுதித் தருபவர்களை விடுத்து தனக்குக் கீழ் இருக்கும் அதிகாரியிடம் புள்ளிவிபரம் கேட்டிருந்தால்கூட அவர்கள் முறையான தகவல்களைச் சொல்லி இருப்பார்கள். ஒரு ஆளுநர் பேசும் ஒவ்வொரு எழுத்தும், சொல்லும் முறையானதாக - அதிகார மீறலற்றதாக இருக்க வேண்டும். ஒவ்வொரு கருத்துக்கும் அவர் பொறுப்பேற்க வேண்டும். தேவையற்ற அரசியலைச் செய்யவும் கூடாது. பேசவும் கூடாது. ஆட்சிக்கு எதிராகப் பேசுவதும், அப்படிப் பேசுபவர்களை அழைத்துப்பேசுவதையும்வாடிக்கையாக வைத்துள்ளார் ரவி. இத்தகைய வன்மம் கொண்டவர், கட்சி ஆரம்பித்து வலம் வரலாம். ஆளுநராக குடியிருக்கக் கூடாது.

கடந்த 23.9.2024 அன்று 'தினமணி' நாளிதழ் 10 ஆவது பக்கத்தில், 'பட்டியலின சமூக மக்களுக்கு எதிரான குற்றங்கள் - 13 மாநிலங்களில் மட்டும் 97 விழுக்காடு வழக்குகள் பதிவு' - என்ற தலைப்பில் ஒரு செய்தி வெளியாகி இருக்கிறது. பட்டியலின, பழங்குடியினர் வன்கொடுமைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் பதிவான வழக்குகள் தொடர்பாக ஒன்றிய அரசு ஒரு அறிக்கையை சமீபத்தில் வெளியிட்டுள்ளது. அதை வைத்து இந்தச் செய்தி வெளியாகி இருக்கிறது.

உத்தரப்பிரதேசம், ராஜஸ்தான், மத்தியப் பிரதேசம் ஆகிய மூன்று மாநிலங்களில்தான் பட்டியலின மக்களுக்கு எதிரான வன்கொடுமைகள் அதிகம் நடப்பதாக ஒன்றிய அரசின் அறிக்கை சொல்கிறது. மூன்று மாநிலத்தையும் ஆள்வது பாரதிய ஜனதா கட்சிதான். இந்தப் பட்டியலில் அடுத்த மூன்று மாநிலங்கள் எவை தெரியுமா? பா.ஜ.க. கூட்டணி ஆளும் பீகார் நான்காவது இடத்தில் இருக்கிறது. பா.ஜ.க. ஆளும் ஒடிசா, ஐந்தாவது இடத்தில் இருக்கிறது. பா.ஜ.க. கூட்டணி ஆளும் மகாராஷ்டிரா, ஆறாவது இடத்தில் இருக்கிறது.

2022 ஆம் ஆண்டு பதிவான வன்கொடுமை வழக்குகள் 51,656. இதில்,

★ உ.பி - 12,287

★ ராஜஸ்தான் - 8,651

★ மத்தியப் பிரதேசம் - 7,732

★ பீகார் - 6,799

★ ஒடிசா - 3,576

★ மகாராஷ்டிரா - 2,706 - என்கிறது அந்த அறிக்கை. இந்தியா முழுவதும் பதிவான வழக்குகளில் 81 விழுக்காடு வழக்குகள் இந்த ஆறு மாநிலங்களில் பதிவாகி உள்ளன. இவை அனைத்தும் ரவியின் கட்சி ஆளும் மாநிலங்கள்தான். இந்தப் பேச்சை அங்கே போய் பேசவும்.

பழங்குடியினருக்கு எதிரான வழக்குகளில் முதலிடத்தை பா.ஜ.க. ஆளும் மத்தியப் பிரதேசம்தான் பிடித்துள்ளது. ராஜஸ்தான், ஒடிசா, ஆந்திரா ஆகிய மாநிலங்கள் அடுத்தடுத்த இடங்களைப் பிடித்துள்ளன.

இந்தியாவிலேயே அதிகளவில் பட்டியலின மக்கள் மீது வன்கொடுமை நடக்கும் மாநிலமான உத்தரப்பிரதேசத்தில் நிலைமை என்ன தெரியுமா? அந்த அறிக்கையில் இருப்பதை 'தினமணி' சொல்கிறது....

"உத்தரப்பிரதேச மாநிலத்தில் வன்கொடுமைகள் நடக்கும் பகுதிகள் என எதுவும் கண்டறியப்படவில்லை. ஆனால் அங்கு அதிக வன்கொடுமை வழக்குகள் பதிவாகியுள்ளன" என்று எழுதப்பட்டுள்ளது.

ஆளுநர் அங்கே செல்லவும் என்பதே நமது அன்பான வேண்டுகோள் ஆகும்!




முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் 2023–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை கவிஞர் மு.மேத்தா அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே.ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா.வைத்திநாதன் மற்றும் கவிஞர் மு.மேத்தா அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்த் திரையுலகில் சிறந்து விளங்கிடும் வாழ்நாள் சாதனையாளர்களைப் போற்றிப் பாராட்டிடும் வகையில் தமிழ்நாடு அரசின் சார்பில் 2023–ஆம் ஆண்டிற்கான கலைஞர் நினைவு கலைத்துறை வித்தகர் விருதினை பின்னணிப் பாடகி திருமதி பி.சுசீலா அவர்களுக்கு வழங்கி சிறப்பித்தார். இந்நிகழ்ச்சியில் தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், செய்தி மக்கள் தொடர்புத் துறை இயக்குநர் மரு. இரா. வைத்திநாதன் மற்றும் திருமதி பி.சுசீலா அவர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.

### தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய நில எடுப்பிலிருந்து 2002 ஏக்கர் நிலங்கள் விடுவிப்பு!

# பயன்பெற்ற பயனாளிகள் - முதல்வர் மு.க.ஸ்டாலினைச் சந்தித்து நன்றி!

## வீட்டுவசதித் துறை அமைச்சர் சு.முத்துசாமி உடனிருந்தார் !

**சென்னை, அக்.6-**

**தமிழ்நாடு வீட்டுவசதி வாரிய நில எடுப்பிலிருந்து 2002 ஏக்கர் நிலங்கள் விடுவிப்பு - பயன்பெற்ற பயனாளிகள் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (4.10.2024) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை செய்யப்பட்ட நிலங்களில் முதற்கட்டமாக பல்வேறு மாவட்டங்களில் 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து ஆணை வழங்கி, தங்களது நீண்ட கால பிரச்சினைகளுக்கு நிரந்தரத் தீர்வு அளித்ததற்காக பல்வேறு மாவட்டங்களைச் சேர்ந்த 10 பயனாளிகள் சந்தித்து, தங்களது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொண்டனர்.

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் கையகப்படுத்த அறிவிக்கை வழங்கப்பட்ட நிலங்கள், கையகப்படுத்த உத்தேசிக்கப்பட்ட நிலங்கள் ஆகியவற்றிற்கு நீண்ட காலமாக பொதுமக்கள் தடையின்மை சான்று கோரியும், நில எடுப்பிலிருந்து விலக்களிக்கக் கோரியும் பல ஆண்டுகளாக தீர்க்கப்படாத இப்பிரச்சினை குறித்து அரசிடம் மனுக்கள் அளித்து வந்தனர்.

பொதுமக்களின் கோரிக்கை தொடர்பாக முதல்வரின் முன்னெடுப்புத் திட்டத்தின் கீழ் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் சிறப்பு புகார் பெட்டிகள் 16 இடங்களில் அமைக்கப்பட்டு, அதன்மூலம் 4488 மனுக்கள் பெறப்பட்டன. அவற்றை பரிசீலித்து முடிவு எடுக்க 10.10.2023 அன்று வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் ஆணையம் மூலம் நில நிர்வாக ஆணையர் தலைமையில் சிறப்புக் குழு அமைத்து அரசாணை வெளியிடப்பட்டது.

குழுவின் கவனமான பரிசீலனைக்குப் பிறகு முதற்கட்டமாக, பல்வேறு மாவட்டங்களுக்குட்பட்ட 2002.21 ஏக்கர் நிலங்கள் நில எடுப்பிலிருந்து விலக்களித்து தற்போது ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், கையகப்படுத்தப்பட்ட நிலங்களில் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தால் பயன்படுத்தப்படாத சூழ்நிலையில் அவைகள் குறித்தும் ஆய்வு மேற்கொண்டு அவற்றையும் விடுவிக்க வேண்டும் என்ற கோரிக்கைகள் தொடர்பாக ஆலோசனை மேற்கொண்டு நடவடிக்கை தொடரப்பட்டு வருகிறது.

இந்நிகழ்ச்சியின்போது, வீட்டுவசதி மற்றும் நகர்ப்புர வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா, தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இயக்குநர் ஜி.எஸ்.சமீரன் ஆகியோர் உடனிருந்தனர்.




திருச்சிராப்பள்ளி மாவட்டம், மண்ணச்சநல்லூர் மற்றும் முசிறி ஊராட்சி ஒன்றியங்களைச் சார்ந்த கூடப்பள்ளி மற்றும் 97 ஊரக குடியிருப்புகளுக்காக ரூபாய் 73.97 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள புதிய கூட்டுக்குடிநீர் திட்டத்தை (01.10.2024) அன்று நகராட்சி நிருவாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தொடங்கி வைத்து, பல்வேறு துறைகளின் சார்பில் ரூபாய் 24.63 கோடி மதிப்பீட்டில் 1680 பயனாளிகளுக்கு அரசின் நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்வில், மாவட்ட ஆட்சித்தலைவர் மா.பிரதீப் குமார், பெரம்பலூர் நாடாளுமன்ற உறுப்பினர் அருண்நேரு, அன்பழகன், சட்டமன்ற உறுப்பினர்கள் ந.தியாகராஜன், செ.ஸ்டாலின்குமார், கதிரவன், மாவட்ட ஊராட்சிக்குழுத்தலைவர் இராஜேந்திரன், மாவட்ட வருவாய் அலுவலர் திருமதி.ராஜலட்சுமி, தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய தலைமைப் பொறியாளர் எஸ்.எழிலரசன், நிர்வாகப் பொறியாளர்கள் தங்கராஜ், நாகஆனந்த், பன்னீர்செல்வம், உதவி நிர்வாகப்பொறியாளர் கார்த்திகேயன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திருமதி.கங்காதாரிணி, மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் வைரமணி, ஒன்றிய பெருந்தலைவர்கள் ஸ்ரீதர், திருமதி.மாலாராமச்சந்திரன், சனமங்கலம் ஊராட்சித் தலைவர் திருமதி.ஹேமலதா ஸ்ரீனிவாசபெருமாள், வட்டாட்சியர்கள், வட்டார வளர்ச்சி அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.